உ

சிவமயம்

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் துணை



அமரர்

திருமதி இராசபூரணி சாம்பசிவம்

அவர்களின்

# நினைவு மலர்

29 - 05 - 98

உ

சிவமயம்

"அன்னையாய் நின்று அனைத்துமே தந்து
தன்னையே ஈந்த தாயடி சரணம்"



# திருமதி இராசபூரணி சாம்பசிவம்

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| **29 - 05 - 1950** | **29 - 04 - 1998** |

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டுவெகு தானிய சித்திரை ஈரெட்டு(ப்)
பூண்டநற் பூர்வத் திருதியையில் - மாண்புடைய
சாம்பசிவ நற்துணையாள் ராசவாம் பூரணியாள்
தாம்சென்றாள் அன்னைபதம் தான்:

உ
சிவமயம்

# வாழ்க்கை வரலாறு

அமுத சுரபிக்குரிய ஆபுத்திரன் கதையும்
குமுதமலர் விழியாள் மணிமேகலைக் குறிப்பும்
அலையோசை புரிநயினை ஆதிவரலா றுரைக்கும்
கலைஞானம் மிக்கோரும் கவிபாட வல்லோரும்
தவஞானப் பரம்பரையும் சங்கம்முதல் இன்றுவரை
சிவஞானத் தலமாகு நயினையதன் சீர்பரப்ப
மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய் அமைந்திடவும்
கீர்த்திபெறும் அருள்வளஞ்சேர் கின்னர கிம்புருடர்
தேவகணம் முதலாய் செய்தவத்தின் பயனாகப்
பாவமொழித்து பரிசாய் வரங் கொடுத்த
நாகபரை கொலுவிருந்து நல்லாட்சி செய்கின்ற
நாகநயினார் தீவில் நற்குடியின் தோன்றல்குணக்
காராள குலத்துதித்த கார்த்திகேசச் செம்மல்
சீரான இல்லறத்தில் செல்லையாப் பெரியோன்
முந்தைவினைப் பயனாய் மூத்தோர் முனைப்பதனால்
கந்தர்மகள் வள்ளியம்மை கைப்பிடித்து இல்லறத்தில்
ஆறாத காதலுடன் ஆற்றரிய அறப்பணியின்
பேறாக வாய்த்த பெருமக்க்ள் சீர்உரைப்பாம்
நல்லாசிரியன் கனகசபாபதி நம்பி தனைக்
கல்யாணம் செய்தமகள் கனிவுதரு மொழியாள்
அன்னபூரணி தனையடுத்து அவதரித்த ஏகமகன்
தன்னாண்மை மிக்கோன் சந்ரசேகரப் பெயரோன்
கன்றாத காதல்மனை கமலாசனி மயிலாள்
பொன்றாத் துணையாக நின்றுபுகழ் சேர்த்த
அன்பால் அரவணைக்கும் அரியரெத்தினம் மணஞ்செய்
தன்பால் வருவோர்க்கு தக்கன செய்திட்டனுப்பும்
சோதரி செல்வ பூரணியாள் சூழவரு
முன்னாள் தலைநகரில் முதன்மைபெறு வணிகன்
அன்னாளில் அவன் செய்த அறத்தின் பயனாக
செல்லையா கண்காணாச் செல்வபூரணி மகளாள்
சொல்லரிய தூயமனம் தொண்டுசெயும் பண்பில்
நல்லோர் மதிப்பிலுயர் நடத்தைதனில் சிறந்த
சொல்லால் செயலால் பிறர்நெஞ்சம் குளிர்விக்கும்

சங்குவரிக் கழுத்தி தங்கும் நகை முகத்தி
கங்குல் பகல் ஓயாது காரியங்கள் ஆற்றறத்தி
தன்னை நயினைதனில் காராள நற்குடியில்
பொன்னை நிகர்த்தகுண நாகலிங்கப் பூமான்
அறவாழ்வில் அருகிருக்கும் தங்கச்சி அம்மாதன்
நிறைவான வாழ்வில்வரு நவரெத்தினத் துணைவி
கமலாம்பாள், நடராசா கைப்பிடித்த சிவக்கொழுந்து
காரியங்கள் நன்றாற்றும் சிவப்பிரகாச மன்னின்
சீரியநற் துணைவி திருவிஜய குமாரியொடு
வணிகநலம் பெறுவோன் சோமசுந்தரம் மனமகிழ்செய்
பணிவுசெறி குணத்தி சிவபாக்கியம் சுற்றம்
தமர்பேணு சோதரர்கள் சோதரியர் சூழநிற்கும்
அமர்லோக கற்பகத்தை அடைந்தால் அரியபயன்
பெறுவார்கள் என்றெமக்குப் பெரியோர்கள் கதைஉரைப்பர்
உறுவார்கள் எவர்தமர் என்றெண்ணாது இயல்பறிந்து
உதவிசெயும் பண்பான் உழைப்பால் தலைநகரில்
பதவிபெறு வணிகநலம் பாராட்டு பண்பாளன்
சாம்பசிவ நம்பிதனைத் தக்கோர் மணஞ்சூட்டி
தார்மகிழ அன்றுமுதல் தாமிருவரென எண்ணர்
ஒருமனதாய் மகிழ்ந்து ஒருமனதாய் இழைந்து
வருபலன்கள் மிகுமெனவே வரலாற்றுப் புகழ்மலியு
தலந்தோறும் சென்றுவந்த தவப்பேற்றால் வருமகளார்
கலைபயிலும் கவிதாவும் கணனிக் கலை பயில்வான்
நிலையான குணமமையு மயூரன் நிகரில்லாச்
செயலாளன் பிரகலாதன் செல்வமகன் எனப்பெற்று
அயலாரை நேசித்து அன்புசொரிந்தின் புறுவார்
தன்வழியில் பெறாமக்கள் தகமைபெறு மாசிரியை
அன்புமகள் சுக்ந்தி பொறியியல் பீடமதில் பயில்
பிரதீபன் அடுத்துவந்த
கலைகள் பயிலும் சயந்தனொடு சஜானி எழிலார்
சிலையை நிகர் அழகி சர்மிளியும் சேர்ந்திழையும்
சாம்பசிவத் துணைவன் தன்வழியில் பெறாமக்கள்
சோ!ம்பியறியா வாசன் துணைதயாளரூபன் மின்னாள்
கலைச்செல்வி தர்சினியும் கணிப்பு பெறுதாயனையாள்
வணிகதலம் நடாத்திவந்த சந்ரசேகரன் வழியில்
அணிகலனாம் பண்பிலுயர் மருமக்கள் வகைஅறிவு
செறிதேவ தர்சினியாள் தேவரஜனிப் பெயாராள்
அத்தையென அழைக்கும் மகிந்தன் அன்புசொரி
வித்தைபயில் சண்முகப் பிரியாவும் அமுதீசன்



துணைவழியில் வந்திட்ட மருமக்கள் ஸ்ரீமுருகன்
இணையற்ற அன்புடைய கோகிலனும் இராசகுமார்
கேதீஸ்வரன் வசந்தன் சுகந்தனொடு பார்த்தீபன்
சோதீஸ்வரியனைய நிவேதிதையும் சொரியு மன்பில்
பெருமைமிகு சுஜாதரவும் சாந்தலோஜினியும் ஒருமை பெறு
மனத்தி பத்மலோஜினி நற்குணத்தான் கடம்பன் சீர்பெருகு
சுகனியாவும்
அகமகிழ்ந்து அனுதினமும் ஆலயங்கள் தொறும்சென்று
முகமலர்ந்து தொழுதேத்தும் முழுமதியை நிகர்முகத்தி
குருவாரம் தப்பாமல் பாபாவின் குரைகழல்கள்
ஒருபோதும் மறவாமல் பூசனைசெய் உயர்பண்பாள்
கனியுதிரக் காயுதிர பிஞ்சுதிர எனும்உரையைத்
தனியுரிமை கொண்டாடு யமன்தமனின் சாத்திரங்கள்
நாற்பத்தியெட்டாண்டு நானிலத்தில் வாழ்ந்தாலும்
ஊர்ப்பற்றும் உறவுதனைக் கொண்டாடி உதவ் செய்து
சாம்பசிவத் தண்ணல் தனக்கோர் தனித்துணையாய்
சோம்பற் குணந்துறந்த சோதரியாள் தன்பிரிவு
பேரிழப்பாம் என்றிட்டுப் பெரிதும் துயருறுவோம்
தாதைக்குத் தாதையுமாய்த் தாயாய் வளர்த்தவளும்
பேதைச் சகோதரங்கள் பெறாமக்கள் பிள்ளைகளும்
மைத்துனர்கள் மைத்துனியர் மருமக்கள் சுற்றமெலாம்
எத்தனைதாம் இவர்பிரிவால் துயர்எய்தி நின்றிடினும்
இறைவன் வகுத்தவழி இவள்பிரிவு என்றெண்ணி
நிறைவுகொள வேண்டுவதும் இராஜபூரணி இதயம்
என்றும் துணைஇருக்கும் எம்மோடு அவள்செய்த
நன்றாம் பணியதனை செய்வதுவே நம்கடனாம்.

# இவர்கள் துயர்

## கணவர் சாம்பசிவம்:

என்னினிய என்னரிய கண்ணே தேனே
உன்னனையார் இனியாரென்று உரைப்பா யம்மா
தண்ணளியும் தனைக்காக்கும் பண்பும் கொண்டு
தமர்சுற்றம் தற்கொண்டான் என்னைக் காத்து
கண்போன்ற மக்களையும் கனிவாய்க் காத்து
காரியங்கள் யாவிலுமே கைகொடுத்த
செல்வமகளே இராஜபூரணியே எந்த
ஜென்மத்தில் யாமிணைவோம் சொல்வாயம்மா.

## மக்கள்:

அரியதவமே செய்து பெற்றிட்ட தாயுனது
அன்பினை நினைத் தழுவமோ
பரிவுடன் பாலூட்டிச் சோறூட்டி பலகலையும்
படிப்பித்த நிலைக் கழுவமோ
புரியு மறிவதனையாம் பெறு முன்னர்
போன்தனை நினைத் தழுவமோ
எரியுமனம் ஆறிடவும் இன்சொல்தனைப் பேசிடவும்
இதயமதில் இருந் தருளுவாய்.

## தாயார்:

கரமிணைந் திட்டிட்ட கணவர் பிரிவுதனையே
காலமெல்லாம் நினைத்து
வருநிலையை மாற்றியே வலம்வந்த செல்வமகள்
மாயமாய்ச் சென்றதேனோ
குருவிதன் குஞ்சினைக் காத்திட்ட வாறுபோல்
குலமகள் உனைக்காத்ததும்
மருகனின் கடமையை மறந்துமே எனைக்காத்த
வண்ணமகள் எங்குசென்றாய்?



## சகோதரன்:

ஊரிலே நாமிருவர் உறவாடி மகிழ்ந்தனம்
ஒருவருக் குதவியானோம்
பேரிலே இராசபூரணி என்றதுபோல்
மனதிலும் பூரணியாய்
நேரிலே எனக்குவரு துயரெலாம் போக்கிடும்
நிழலதாய் நின்றுதவினாய்
யாரெனக் கிங்குளார் யாரெனிப் புகலுளார்
யாரிடம் போவதம்மா?

## சகோதரிகள்:

பூவைநிகர் நின்முகம் புத்தெழில் காட்டுமே
புன்னகை கவலை தீர்க்கும்
நாவில்வரு இன்சொலில் எம்துயர் மறக்குமே
நமனுலகு சென்ற தேனோ
பாவைநிகர் குறுநடை பயின்றிடும் இராசாத்தி
பாசமுடன் எனை அணைத்துச்
சாவை வரவழைத்துமே நமனுலகு சென்றனை
தாங்கிடாக் கவலை தந்தாய்.

## மைத்துனர்:

பாசமுடன் அண்ணியென வந்ததும் பரிவுடன்
பணிவாய் இருக்கை தந்து
நேசமுடன் நல்லினிய வார்த்தைகள் சொல்லியும்
நிறையவே உதவி செய்தும்
வாசமல ரென்னவே முகவாட்ட மில்லாது
வழியெமக் கனுப்பி வைக்கும்
நேசமகளே யெமை நீங்காத துயரினில்
நிலைத்திடச் செய்து சென்றாய்.

## மைத்துனிகள்:

கன்றினைக் கண்டபசு தன்னிலையில் எம்மையே
கண்டதும் வரவேற்றுமே
நன்றிது தீதிவைகள் என்றுமே அறிவூட்டி
நல்வழியில் நடாத்திநின்றாய்
என்றுமே நின்துணை இருக்குமென எண்ணியே
இறுமாந்து இனிமைகண்டோம்
இன்றெமது நிலைஎண்ணி ஏங்கியே நிற்கின்ற
எம்துயர் தீர்வதெப்போ?

## மணவழிச் சகோதர - சகோதரிகள்:

தங்கக் கரத்தினால் அமுது படைத்தேயெமை
சற்றுமே குறை விலாது
பங்கம் வாராதெமைப் பராமரித் துதவிடும்
பான்மையைச் சொல்லி அழவோ
வங்கக் கடலது வற்றிடினும் நின்பாசம்
வற்றிடா நிலை மறந்து
எங்கக்கா யாமினி எம்குறை சொல்லியழ
ஏங்குதே நெஞ்சம் ஐயோ!

## பெறாமக்கள்:

வட்டிலில் சோறூட்டி வண்ணமலர் ஆடைகள்
வாங்கியே அணிவித்துமே
தொட்டிலில் தாலாட்டித் தூங்கவைத் தினியகதை
சொல்லி மகிழ்தாயல்லவோ
கட்டியே அணைத்தெமை முத்தீன்ற முகமது
கருகிடும் நிலைகண்டுமே
மட்டிலாத் துயரினில் மனஞ்சோம்பு நிலைகண்டு
வந்தெமது துயர்தீரம்மா.



## மருமக்கள்:

தாய்ப்பாசம் காட்டியே தாவியே அணைத்திட்ட
தன்மை நிலை நினைந்தழுவமோ
மேய்ப்பார்கள் போலெமது மேனியெழில் கூட்டிடும்
விதத்தினில் உடைகள் தந்து
ஏய்ப்பார்கள் இவ்வுலகில் இருப்பதை உணர்த்தியே
எமக்கினிய வழி காட்டினாய்
தேர்ப்பாகன் இல்லாத தேரெனவே யாமெமது
திசைமறந் தேங்கி நிற்போம்.

## உற்றார்:

செல்வமகள் இராசாத்தி எமக்கெலாம் செய்தவை
தினம்தினம் சொல்லி மகிழ்ந்தோம்
வெல்வமே எமக்குவரு துயரென நின்னுதவி
மேன்மைதனைச் சொல்லி மகிழ்வோம்
சொல்நேயம், நாணயம், தூய்மைபெறு நெஞ்சமே
துயர் போக்குமென மகிழ்ந்தோம்
செல்வபூரணி எமக்கினிய செல்வமே இனி எங்கு
செல்வமே ஏங்கு கின்றோம்.

## தேற்றம்

கற்றவர் நற்றவர் மற்றவர் எவரெனினும்
பெற்றிலர் நீடர்யுள் பெருமையுடைத் திவ்வுலகு
நற்றவப் பேறருளு நாகம்மை பதம்போற்றி
முற்றறிவு தனைப்பெற்று முத்திபெற் றுய்வமே.

உ
சிவமயம்
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
அறங்காவலர் சபைத் தலைவரும்
முன்னாள் வேலணை உதவி அரசாங்க அதிபரும் ஆகிய

# திரு. கா. ஆ. தியாகராசா

அவர்களின்

# இரங்கல் உரை

''எனக்குத் தாயாகினாள் என்னை இங்குவிட்டு
தனக்குத் தாய்நாடிச் சென்றாள்
தனக்குத் தாயானவளும் தாய்நாடிச் சென்றாள்
தாய்நாடிச் செல்லும் இவ்வுலகு'' – என்ற

முதுமொழிக்கு இலக்காக பெற்ற தாயும் உடன் பிறந்தவர்களும், கணவனும், தான் ஈன்ற பிள்ளைகளும், சுற்றத்தாரும், பிறரும் ஏங்கித்தவிக்க இவ்வுலக வாழ்வை நீக்கி உயிரை இறைவனுக்கும் உடலை மண்ணுக்கும் எனச் சென்றாள் இராசபூரணி.

அகில உலக மாதாவாகிய அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் அடிபரவி, அர்ச்சனை பூசை செய்து, எண்ணி எட்டாம் நாள் இம்மண்ணைவிட்டு விண்சென்றாள் இம்மங்கை என்ற செய்தி என்னை நிலைகுலையவைத்தது; ஏன்? எப்படி? எங்கே? என்று எனக்குத் தகவல் தந்தவரிடம் கேட்டேன். என் காதுகளில் விழுந்த இச் செய்தியை என்னால் முற்றாக நம்பவும் முடியவில்லை. செய்தி உண்மையே ஆகிவிட்டது.

சிவம் சக்தி இன்றி இயங்காது. சக்தி சிவம் இன்றி இயங்காது இதற்கு உதாரணமாக வாழ்ந்தவர்கள் தம்பி சாம்பசிவமும் - இராசபூரணியும். சாம்பசிவம் ஓர் சாந்தசிவம். இவர் வாய் திறந்து பேசியதை நான் கேட்டதில்லை. ஆனால் இராசபூரணி வாய்மூடி இருந்ததை நான் கண்டதில்லை. ஒரு நிமிடத்துக்கு ஒரு நூறு சித்தப்பா. வார்த்தைக்கு வார்த்தை உறவு முறை. இந்தமாதிரி உறவுமுறை கூறிப்பேசுவதில் இவருக்கு ஒரு தனி இன்பம். கலகலப்பாகப்பேசி எல்லோர் உள்ளத்திலும் தனக்கு ஒரு இடத்தைப் பெற்றுக்கொண்டார். நெஞ்சில் வஞ்சம் இல்லா ஓர் ஆன்மா. சுற்றம்பேணி, உறவுமுறை கொண்டாடி



வையத்துள் வாழ்ந்தால் இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்ந்தவர் இவர். முகக்குறிப்பால் மற்றவர் இடர் உணர்ந்து உதவி செய்பவர் சாம்பசிவம். அவர் துணைவியாரும் எவருக்கு எப்போ எந்த உதவி தேவை என உதவி செய்து உதவியவர். என்றாலும் வாழ்வும் தாழ்வும் நம் கையில் இல்லை. ஒரு காரியம் ஆக ஒரு காரணம் வேண்டும். அந்த வகையில் குறுகிய நாட்களில் எல்லோரையும் கலங்கவிட்டு இந்த மண் விட்டு விண் சென்றுவிட்டாள் இந்த நங்கை. அவர் ஆன்மா சாந்தி பெற்று எல்லாம் வல்ல இறைவியின் பாதங்களை அடைந்திருக்கும்.

மனித மனம் சஞ்சலம் கொண்ட ஒரு அலை மோதும் சமுத்திரம். இந்த வகையில் இவர் பிரிவால்துயருறும் அனைவரும் சாந்திபெற்று தம்மைத்தாமே தேற்றிக்கொள்ளவேண்டும். இதை உணர்ந்தவர் நம் அருட்செல்வர் திருஞானசம்பந்தர். அவர் சஞ்சலப்படும் எமக்குத் தந்த திருமுறையில் இரு பாடல்களை இங்கு தருகின்றேன். சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்தால் துன்பம் இல்லை.

திருவாரூர் தேவாரம் பண்: காந்தாரம்

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றர் பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியாலேழை நெஞ்சே
அந்தணாரூர் தொழுதுய்யலா மையல் கொண்டஞ்சல் நெஞ்சே.

செடிகொள் நோயாக்கையம் பாம்பின்வாய்த் தேரையாய்ச் சிறுபறவை
கடிகொள்பூந்தேன் சுவைத்து இன்புறலாமென்று கருதினாயே
முடிகளால் வானவர் முன்பணிந்தன்பராய் ஏத்து முக்கண்
அடிகளாரூர் தொழுதுய்யலா மையல் கொண்டஞ்சல் நெஞ்சே.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நயினாதீவு - 5 கா. ஆ. தியாகராசா

# மாணிக்க வாழ்வு

அன்பும், பண்பும், பாசமும் நிறைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அமரர் சாம்பசிவம் இராசபூரணி அவர்களின் திடீர் மறைவு எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஓட்டி உறவாடி எங்களில் ஒருவராக மண்ணினில் நல்லவண்ணம் வாழ்ந்த அன்னாரின் நிறைவாழ்வை நினைவு கூருகின்றேன்.

குடும்பத்திலே மூத்த அத்தாராகக் கால்பதித்த போது என்னைத் தந்தையாக எண்ணி, மதிப்பளித்துப் பூரிப்படைந்த அந்த நிகழ்வை நினைக்கின்றேன். பெரியப்பா, பெரியப்பா என்று செவி குளிர அழைக்கும் ஓசையை நினைக்கின்றேன். நற்பண்புகள் நிறைந்த கணவனைக் கைப்பிடித்து ''தற்காத்து தற்கொண்டாற் பேணி தகைசார்ந்த சொற்காத்து'' அவருக்கு உறுதுணையாக இருந்து இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக வாழ்ந்து காட்டிய அவரது வாழ்வை நினைக்கின்றேன். நன் மக்களாக புத்திரியையும், இரு புத்திரர்களையும் புறந்தந்து அவர்களைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்து அன்பு பாராட்டி அறுசுவையூட்டி செல்லமாக வளர்த்து அவர்களின் உயர்வுக்காய் வழிமேல் விழிவைத்து பாடுபட்ட தாய்ப்பாசத்தை நினைக்கின்றேன். வயதுமுதிர்ந்த தமது தாயாரைக் கட்டிலில் இருத்தி காலந்தவறாது கடமைகள் செய்து பாதுகாத்த அவரது கடமையுணர்வை நினைக்கின்றேன்.

தனது தாய், சகோதரர்கள், தனது துணைவரின் தாய் சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார், பிள்ளைகள், மருமக்கள், உறவினர் யாவரையும் உபசரித்து உறவாடி செழுங்கிளை தாங்கும் மரம்போன்று வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றேன். ''இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்ற வள்ளுவர் வாக்கின்படி வருவிருந்தினரை முகமலர வரவேற்று விருந்தோம்பி வாசல்வரை சென்று வழியனுப்பும் தமிழ்ப்பண்பை நினைக்கின்றேன். அன்னாரின் மறை



வுச் செய்திகேட்டு துடிதுடித்து ஊரேதிரண்டுவந்து இராசாத்தி, இராசாத்தி என்று கண்ணீர்விட்டுக் கதறிய காட்சியை நினைக்கின்றேன்.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உரியார் பிறர்க்கு''

என்னும் குறளுக்கேற்ப வாழ்ந்துவந்த சமூக வாழ்க்கையை நினைக்கின்றேன். கல்லுவைத்த கோயில் எல்லாம் கைகூப்பி நோன்பிருந்து, கார்த்திகை, கந்தசட்டி, திருவெம்பா, திருவிழா என வரிசையிட்டு ஆலயங்களுக்கு தொண்டுசெய்த இறைபக்தியை நினைக்கிறேன். எல்லாவற்றையும் நினைக்கும்போது உலகிலே நிலையாமைதான் நிலையானது என்ற உண்மையை உணர்த்துகிறது. அவரது ஆன்மா நிச்சயம் சாந்தியடையும். துணையை இழந்து ஆறாத் துயருறும் கணவன் பிள்ளைகள், உறவினர் எல்லோரும் மன அமைதிபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி!

இ. கனகசபாபதி அத்தார்
பிரதி அதிபர்
கொக்குவில் யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்

கோட்டம் நெடுந்தீவு உதவிக் கல்விப்பணிப்பாளர்

### திரு. சோமசுந்தரம் தில்லைநாதன் அவர்களின்

# இரங்கல் உரை

''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்''

அன்பு, பண்பு, பாசத்துடன் எம்மோடு வாழ்ந்து என்றும் எம் அகக்கண்ணுள் அகலாது நிற்கும் சிவப்பேறெய்திய சகோதரி இராசபூரணி சாம்பசிவம் அவர்களை நினைவுகூரும் எம் அஞ்சலி.

பிறவி எடுத்த நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல, எவ்வாறு வாழ்ந்தோம் என்பதே முக்கியமானது. தங்கையின் ஆண்டு நாற்பத்தெட்டு அகவையே ஆயினும்,

''நயனொடு நன்றிபுரிந்த பயனுடையர்
பண்பு பாராட்டும் உலகு''

என்ற பொய்யா மொழிக்கு அமைவாக செம்மையுடைய வாழ்வாக உலகோர் போற்றிப் பாராட்டும் வகையில் சிறப்புப் பெற்றது.

எப்படியும் வாழலாம் என்று மாறிச் சென்றுகொண்டிருக்கும் சமுதாயத்தில் இப்படித்தான் வாழவேண்டுமென முன்வந்த பெரியோர்கள் காட்டிய நெறியில் நின்றும் சற்றும் பிறழாது வாழ்ந்தவர் எம் சகோதரியென இந்த அளவுகடந்த துக்கமான வேளையிலும் எண்ணிப் பெருமை கொள்கிறேன்.

தன் குடும்பத்துடன் சுருங்கிவிடாது பெற்றோரைப் பேணி, சகோதரங்களை ஆதரித்து, உறவினருக்கு உதவி தன் நல்மனம் போல் வாழ்ந்தார்.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் - அன்புடையார்
என்பும் உடையார் பிறர்க்கு''

என்ற வள்ளுவரின் வாக்குக்கு இணங்க வாழ்ந்த காரணத்தினாலே எம் கிராமமே மரணத்தைக் கேட்டுச் சோகத்தில் ஆழ்ந்தது.



சுமைதாங்கியாக வாழ்ந்த தங்கையின் திடீர் மறைவால் நிலைகலங்கித் துடிக்கும் மைத்துனருக்கும், அருமைக் குழந்தைகள் மூவருக்கும், தாயாருக்கும். சகோதர சகோதரர்களுக்கும், இனபந்துக்களுக்கும் ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லை. ''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்'' என்ற யோகர் சுவாமிகளின் அருள்வாக்கே என்முன் வருகின்றது.

''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற அப்பர் சுவாமிகளின் வாக்குக்கு அமையப் பெற்றது சகோதரியின் வாழ்க்கை. அதனைப் பின்பற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். ஆன்மா என்றும் அழிவதில்லை. அவர் என்றும் எங்களை வழிநடத்துவார்.

ஸ்ரீ சத்ய சாயி பாபாவை அனுதினமும் வணங்கி வந்தவர்: அவரின் பிறந்த நாளாகிய வியாழக்கிழமையிலேயே தீயுடன் சங்கமமானது இறையருளே. கண்ணன் கீதையிலே கூறியவாறு, பயனை எதிர்பாராது கடமையைச் செய்த அந்த உயர்ந்த ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சோ. தில்லைநாதன்**
சகோதரர்.

நயினாதீவு - 5

உ

சிவமயம்

# திருமுறைப் பாமாலை

## விநாயகர் பாடல்கள்

திருவாக்கும் செய்கருமம் கைக்கூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகரம் மூன்றுவிழி நால்வாய்
யானைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

## தேவாரம்

மங்கையற்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்து நாள்தொறும் பரவ
பொங்களலுருவன் பூதநாயகனார்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாயாவதும் இதுவே.

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர்நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னி
திருவானைக் காவுடைய செல்வாவென்றென்(று)
அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லல்கண்டங் கொண்டடியேன் என்செய்கேனே.

அந்தணாளனும் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மை கண்டடியேன்



எந்தை நீயெமை நமன்நமர் நலியின்
இவன் மற்றென்னடியானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூருளானே.

## திருவாசகம்

இன்றெனக் கருளி இருள் கடிந்துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப்பெருந்துறையுறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றியொன்றில்லை
யாருன்னை அறியகிற்பாரே.

## திருவிசைப்பா

கிளரிளஞ் சேயக் கிரிதனைக்கீண்டி
ஆண்டகை கேடில் வேற்செல்வன்
வளரிளஞ் செஞ்சடையான் மதலை
கானிறமால் திரு மருகன்
திளரிளம் பொழில்சூழ் திருவிடைக்கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் கொங்கை மொய்குழற் சிறுமிக்கு
அருளுங்கொல் முருகவேள் பரிந்தே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டு என்னும் சிறுதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டு என்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை
என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

உடலினூடு போய்மீளு முயிரினூடு மாயாத
உணர்வினூடு வானூடு - முதுதீயுள்
உலவையூடு நீரூடு புவியினூடு வாதாடும்
ஒருவரோடு மேவாத - தனிஞானச்
சுடரினூடு நால்வேத முடியினூடு மூடாடு
துரிய வாகுலாதீத - சிவரூபம்
தொலைவிலாத பேராசை துரிசறாத வோர்பேதை
தொடுமுபாய மேதோசொல் - அருள்வாயே
மடலறாத வாரீச அடவிசாடி மாறான
வரிவரா குவால் சாய - அமராடி
மதகுசாடி மீதோடி யுழவரால்வி டவோடை
மடையைமோதி யாறூடு - தடமாறிக்
கடல்புகாத மாமீனை முடுகிவாளை தான்மேவு
கமலவாவி மேல்வீழு - மலர்வாவி
கடவுள் நீலமாறாத தணிகை காவலாவீர
கருணைமேருவே தேவர் - பெருமாளே.

### கந்தர் அலங்காரம்

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார் தினைப்போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என்செய்வார் எமதூதருக்கே.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான் தழைத்தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.



உ
சிவமயம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

# துதிப்பாடல்கள்

### நயினை நாகபூஷணி தியான சுலோகம்

நயினைத்வீப நிவாசனீம் நதிகிருதாம்
ஆனந்த சந்தாயினீம் பக்தாரிஷ்ட நிவாரிணீம்
விதிசுதையிர் நாகை புரா பூஜிதாம்
நாகானாம் ஜனநீதி லோக வதனை
கியாதாம் சுபாம் சாஸ்வதாம்
நௌ மித்துவாம் பரதேவதாம்
மம மனோ பீஷ்டார்த்த சித்திப்பிரதாம்
அன்யோன்ய கர்த்தா கிருதிமகில
ஜகன்மா தரம் நாகபூஜ்யாம்
ஆலிங்காதி பிரவிருத்த ஸ்தனபரநிமிதா
துங்க லிங்கே நிஷண்ணாம்
நயினைத் துவீபே நிவாசாம்
நகஜன சுகதாம்
சர்வ சம்பத் பிரதார்த்ரீம்
வந்தே கைலாசநாத பிரியதம
கிரகனீம் வாசவாத்தி யேஸ்து வத்தியாம்.

## துதிப்பாடல்கள்

கண்ணொளி இழந்தோர் மற்றும்
கர்ம நோயுற்றோர் வாழ்வில்
புண்ணுளப் பட்டோர் நொந்தே
புலம்பிடப் புனர்வாழ்வீயும்
திண்மையும் திருத்தலத்தின்
செம்மையும் தேரும்கால
வண்மையும் வளமும் வாய்ந்த
மணிதிகழ் நாகம்மாளே:

பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலால் அன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய வனைத்தும்
உதவலால் அன்னை யெக்கலையுஞ்
சொற்றதாலன்னை யுலகெர்டுவானும்
தெர்முதலால் அன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிததால் அன்னை
பராபரை நாகபூடணியால்.

கற்றவர்க் கினியாய் நயினையம்பதிவாழ் காரணீநாரணன் தங்காய்
மற்றவரறியா மரகதவரையின் வாமமேவளர் பசுங்கொடியே
நற்றவரோடு சேயெனன இருத்தி நாதநாதாந்தமுங் காட்டி
முற்றுமாய் நிறைந்த பூரணானந்த முத்திதா நாகபூஷணியே.

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும்மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர்தெய்வம் வந்திப்பதே.



ஓம் ஸ்ரீ சாயிராம்

# ஸ்ரீ சத்திய சாயி பாபா பஜனைப் பாடல்கள்

## விநாயகர்

மாதங்க வதனா ஆனந்த சதனா
மகாதேவ சிவ சம்போ நந்தன
மாய விநாயக மூஷிக வாகன
மாதா மகேஸ்வரி பவானி நந்தன
மகா கணபதே மங்கள சதனா - மாதங்க வதனா

## குரு

ஜெயகுரு ஓங்காரா ஜெயஜெய
சற்குரு ஓங்கர்ரா
பிரம்மா விஷ்ணு சதாசிவா – ஓம்
ஹரஹர ஹரஹர மகாதேவா - ஜெயகுரு

## சிவன்

சங்கர சங்கர சங்கர ஜெய்
சிவ சங்கரா சிவ சங்கரா
சிவ சங்கர ரூப மகேஸ்வர ஜெய் - சிவ சங்கர

முனிஜன பிரிய சிவசங்கர ஜெய்
பைரவி பிரிய சிவ சங்கர ஜெய்
சர்வ பூதப் பிரிய சங்கர ஜெய்
சிவ சாயிநாத சிவ சங்கர ஜெய் – சங்கர சங்கர

## அம்பாள்

துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி சாயி ஜெகன்மாதா
சாயி ஜெகன்மாதா மாம்பாஹி ஜெகன்மாதா
சாயி ஜெகன்மாதா மாம்பாஹி ஜெகன்மாதா துர்க்கா.

## முருகன்

வேல் முருகா வேல் முருகா
வேல் முருகா வடிவேல் முருகா – வேல்முருகா
கந்தா கடம்பா வேல்முருகா
கதிர்காம வேலா வேல்முருகா – வேல்முருகா

சூரசம்மாரா வேல்முருகா
சுப்ரமணியனே வேல்முருகா - வேல்முருகா

சாயி முருகா சாயி முருகா
சாயி முருகா ஜெய் சாயி முருகா - வேல்முருகா

## கோவிந்தா

கோவிந்த கிருஷ்ண ஜெய் கோபாலகிருஷ்ண ஜெய்
கோபால பால பாலராதா கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய் - கோவிந்த

கிருஷ்ண ஜெய் ராமா கிருஷ்ண ஜெய்
ராதா கிருஷ்ண ஜெய் பாலகிருஷ்ண
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய் - கோவிந்த

கோபிகாமால ஹாரிப்பியாரி
மாயிமீர மன விகாரி
மதுர மோகன முரளிதாரி கிருஷ்ண ஜெய் -
கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய் கிருஷ்ண ஜெய் -
கிருஷ்ண ஜெய்
கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஜெய் - கோவிந்த

ஜெய் ஸ்ரீ சாயிராம்.

# நன்றி நவிலல்

அன்பே அணிகலனாகக் கொண்டு அரவணைத்து ஆதரவு காட்டி, ஆரமு தூட்டிச் சீரிய வாழ்விற்கு வழிகாட்டிய எமது இல்லத் தலைவியாம் குடும்ப விளக்கு அணைந்த செய்தி கேட்டு உடன் எமது இல்லத்திற்கு விரைந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலரஞ்சலி செலுத் தியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவிகள் புரிந்தவர் களுக்கும், அம்பிகை களஞ்சிய ஸ்தாபனத் தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றி கள் என்றும் உரியது.



கணவன், மக்கள்,
தாயார், மாமி,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்,
மைத்துனிமார்.